# கிறிஸ்துவின் நியாயாசனத்தில் நீங்கள் பெறப்போகிற இழக்க போகிற பலன்கள் - நிகழ்ச்சி 4

**அறிவிப்பாளர்:** கிறிஸ்தவர்களுக்கு வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது, “நாம் அனைவரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிச்சயமாக நிற்கவேண்டியிருக்கும்.” ஆனால் இந்த நியாயதீர்ப்பிற்கான நோக்கம் என்ன? இயேசு நம்முடைய பாவத்திற்கான கிரையத்தை செலுத்தி விட்டாரா தேவன் அவைகளை நினைவு கூறுவது இல்லையா?

அப்படியானால், கிறிஸ்தவர்கள் ஏன் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நிற்கவேண்டும்? இந்த நியாயதீர்ப்பிற்கும் இரட்சிப்பிற்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா. இரட்சிப்பு என்பது ஒரு நபர் கிறிஸ்துவை விசுவாசித்து ஏற்றுகொள்ளும்போது அவனுக்கு அளிக்கப்படுகிற இலவசமான ஈவாகும்.

ஆனா கிறிஸ்துவின் நியாசனம் என்பது அவர் நம்மை இரட்சித்ததற்கு பிறகு நாம் வாழும் முறையை சார்ந்து இருக்கிறது. கிறிஸ்துவுக்காக நாம் செய்திட்ட அணைத்தும் அன்று பதிப்பிடபட்டு பலனளிக்கப்படுகிறது.

வேதம் சொல்கிறது, “ஏனென்னில் சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது ஏற்ற பலனை அடையும்படிக்கு நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்”.

நாம் அவருக்காக செய்த நற்க்கிரியைகளுக்காக கிறிஸ்துவிடம் இருந்து பலனை பெறுவோம் என்பது நமக்கு தெரியும், ஆனா இங்க வேதம் என்ன சொல்கிறது என்றால் நம்முடைய தீமைக்கும் பலன் பெருவோம் என்கிறதே? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பெருகிற பலன்களை உண்மையில்லாத கிறிஸ்தவர்கள் பெறமாட்டார்களோ?

ஆனா கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக கண்ணீர் இருக்க வாய்ப்பிருக்கிறதா? அங்கு பலன்களை இழக்க நேரிடுமா, பதிப்பையும் கனத்தையும் பரலோகத்தில் நித்தியமாக நமது ஸ்தானத்தை இழக்க வாய்ப்பு இருக்கிறதா?

இந்த கேள்விகளுக்கு வேதாகமத்தில் இருந்து விடைகளை பெற்றுக்கொள்ள நமக்கு உதவியாக இன்றைக்கு Dr. எர்வின் லட்சர் நம்முடன் இருக்கிறார், மூடி திருச்சபையின் மூத்த போதகர் சிக்காகோ, இல்லினோசிஸ். நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: வணக்கம். நீங்க ஒரு கிறிஸ்தவராக இருந்தால், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக என்ன நடக்கும்

என்று உங்களுக்கு தெரியுமா? சரி, முதலாவதாக, நீங்க அங்க இருப்பீங்கன்னு வேதம் சொல்கிறது. இரண்டாவதாக, நம்மை குறித்து நாம் கணக்குகொடுக்கவேண்டும் என்றும் வேதம் சொல்கிறது. நீங்க நீண்ட கால கிறிஸ்தவராக இருந்தால், ஒரு விஷயத்தை கவனித்து இருக்கீங்களா தேவனுக்காக நாம் செய்கிற பல காரியங்கள் சுய நோக்கம் உடையதாக இருக்கிறது. அப்படிப்பட்ட கிரியைகளை நாம எப்படி நிதானிக்க போகிறோம்? என்னோட நண்பரோடு பேசிகொண்டிருக்கும் இந்த உரையாடலை நீங்களும் கேட்க்க விரும்புகிறேன் இவர், Dr. எர்வின் லட்சர் சிக்காகோ மூடி திருச்சபையின் மூத்த போதகர், இல்லினோசிஸ். இந்த கேள்விக்கு இவர் பதில் சொல்கிறார். அதை நீங்களும் கேட்க விரும்புகிறேன்.

**டாக்டர். எர்வின் லட்சர்:** சரி, ஜான், இந்த நோக்கத்தை மேம்படுத்தி சொல்வது மிக அவசியாமான ஒன்று. நாம தேவனுக்கு ஊழியம் செய்யணும் அவரை பிரியபடுத்த வேண்டும். ஆனா நம்முடைய நோக்கங்களில் சுய எண்ணமும் கலந்திருப்பதை நாம் ஒத்துகொள்ளத்தான் வேண்டும், அது உண்மைதானே? உதாரணமா, ஒரு பெண் சாலையை கடக்க நாம உதவி செய்கிறோம் அதை நம்முடைய குடும்பத்தினரிடம் சொல்ல நல்ல காரியம் செய்ததை சொல்ல இரவு உணவின் நேரம் வரை காத்திருக்க முடியாம அவதிபடுகிறோம்.

அதாவது, நல்லா நியாபகம் இருக்குது ஒருமுறை ரோட்ல போயிட்டு இருக்கும் போது பார்த்த சம்பவம், ஒரு பெண், அவளோட கார்ல எரிவாயு தீர்ந்திடுச்சு அதனால அவ நடந்து போயிட்டு இருந்தா அவளுக்கு கேஸ் கிடைக்கலாம். அதனால நான் ஒரு ஸ்டேஷனுக்கு போனேன். ஒரு கேன் வாங்கிட்டு வந்து. அவளுக்கு அதை குடுத்தேன். நா சாலையின் ஓரத்தில் நின்று அவங்க காருக்கு கேஸ் பில் பண்ணீட்டு இருந்தேன் - அல்லது அந்த நேரத்துல அவங்க காருக்கு கேஸ் நிரப்பி கொடுக்கும் போது, நான் யோசித்து பார்த்தேன், “அடடா, மூடி திருச்சபையின் மக்கள் எல்லாரும் இப்படி என்ன பார்த்தா நல்லா இருக்குமே.” இதுதான் நம்முடைய சுபாவமாக இருக்குது, அப்படிதானே?

இந்த கிரியைகள் எல்லாம் எப்படி தேவனுக்கு பிரியமுள்ளதாக இருக்கமுடியும்? சரி, நற்செய்தி என்னன்னா, மீட்கப்பட்டவர்களுக்கு தேவன் ஒரு காரியத்தை செய்திருக்கிறார், இரட்சிக்க பட்டவர்களுக்காக செய்திருக்கிறார். 1 பேதுருவில் சொல்லப்பட்டு இருக்கிறது, “இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுக்கு பிரியமான ஆவிக்குரிய பலிகளை நாம் செலுத்திட வேண்டும்.” பிலிப்பியரிலும் பவுல் இது ரொம்ப அவசியமான ஒன்று என்று சொல்லியிருக்கிறார். அவர் சொல்கிறார், “இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனுக்கு மகிமையை செலுத்துவது நீதியின் கனிகளாக இருக்கிறது.”

**ஆன்கர்பெர்க்:** இப்போது எர்வின் என்ன சொல்லி கொண்டிருந்தார் என்றால் நாம கிறிஸ்துவுக்காக வாழ முயற்சிக்கும்போது, நம்முடைய

கிரியைகளில் சில உள்நோக்கம் இருக்குமானால், கிறிஸ்துவானவர் அவற்றை சுத்திகரித்து அதை பிதாவானவர் அங்கீகரிக்கும் விதமாக சுத்திகரித்திடுவார். இதை பற்றி இன்னும் கொஞ்சம் பார்க்கலாம். நாம கிறிஸ்துவினுடைய நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கும்போது உண்மையாகவே கிறிஸ்து நம்மிடம் எதிர்பார்க்க கூடிய காரியங்கள் என்னவாக இருக்கிறது? வேதம் நம்முடைய கிரியைகளை பற்றி சொல்லும்போது பொன் வெள்ளி விலையேறபெற்ற கல் அல்லது மரம் புல் வைகோலுக்கு ஒப்பிட்டு கூறுகிறதே, இதனுடைய வித்தியாசம் என்ன? Dr. லட்சர் விளக்கமளிக்கிறார். இதை கவனமாக கேளுங்கள்.

**எர்வின் லட்சர்:** இவைகளுக்கு உள்ள வித்தியாசம் என்ன பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கல்  இதை பற்றிதான் பேசிக்கொண்டு இருக்கிறோம். அதோட மரம், மற்றும் புல், மற்றும் வைக்கோல் என்னது? சரி, இன்றைக்கு இதை நீங்கள் கேட்டு கொண்டு இருந்தால் கிறிஸ்துவை நீங்கள் பிரியப்படுத்த விரும்பினால் நியாயாசனத்திற்கு முன்பாக சிறப்பாக நிற்க விரும்பினால், வேதத்தில் இருந்து உங்களுக்கு பத்து வசனங்களை எடுத்து சொல்ல விரும்புகிறேன். அவைகளை திருப்பி பார்க்க முடியாவிட்டாலும் வசன குறிப்புகளை சொல்கிறேன் அது கிறிஸ்துவின் எதிர்பார்ப்பு என்ன என்பதை நீங்கள் புரிந்துகொள்ள உதவியாக இருக்கும்.

1). முதல்ல, உதாரணமாக, முதல்ல. அவருடைய நாமத்தினிமித்தம் உபத்திரவத்தை சகிக்க ஆயத்தமாக இருத்தல். இந்த

வேத பகுதி மத்தேயு ஐந்தாம் அதிகாரத்தில் இருக்குது கவனமா பாருங்க. இயேசு சொல்கிறார், என்னிமித்தம் உங்களை நித்தித்துத் துன்பப்படுத்தி பலவிதமான தீமையான மொழிகளையும் உங்கள்பேரில் பொய்யாய் சொல்வார்களானால் பாக்கியவான்களாய் இருப்பீர்கள். சந்தோஷப்பட்டு களிகூருங்கள்; பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். உங்களுக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளையும் அப்படியே துன்பப்படுத்தினார்களே." இன்றைக்கு நீங்கள் ஒன்றை புரிந்துகொள்ள விரும்புகிறேன் இயேசுவுக்காக உங்களை வேலையில் இருந்து வெளியேற்றும் நிலை வந்தால், அந்த சந்தர்ப்பத்தை நழுவ விடாதீர்கள். நாம எப்படி அர்த்தப்படுத்தி கொண்டாலும் சரி பலவிதமான உபத்திரவங்கள் நம்ம வாழ்க்கையில் வர வாய்ப்பு உண்டு. ஏன்? அது சிறந்த பலனை நாம பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பத்தை உண்டாக்கும் - அதை வேதாகமத்தின்படி கையாளவேண்டும். இயேசு எதை கவனிக்க போகிறார் என்பதற்கான இரண்டாவது உதாரணத்தையும் தருகிறேன்.

2). உதாரத்துவமான பொருளாதாரம். மத்தியு 6ல அவர் சொன்னது நினைவிருக்கிறதா, "உங்கள் பொக்கிஷங்களை பூமியிலே சேர்த்து வைக்கவேண்டாம் இங்கே பூச்சியும் துரும்பும் அவைகளை கெடுக்கும். இங்கே திருடர் கன்னமிட்டு திருடுவார்கள், பரலோகத்திலே உங்களுக்கு பொக்கிஷங்களை சேர்த்து வையுங்கள்." அதாவது, உண்மையாக இருப்பதற்கு இயேசு பணத்தைதான் நல்ல உதாரணமாக

வைத்து சொல்லுகிறார். இன்னொரு இடத்தில் சொல்லியிருக்கிறார், “இன்னொருவருடையதை உங்களால் பார்த்துக்கொள்ள முடியாவிட்டால் - அது, தேவன் கொடுக்கிற எதுவாக வேணாலும் இருக்கலாம் - “மேலான ஐசுவரியத்தை நீங்கள் எப்படி பெற்றுக்கொள்ள முடியும்? அதனாலதான் இயேசு சொல்லுகிறார்: பரலோகத்திலே உங்கள் பாலனை பெற்று கொள்ளும் விதமாக நீங்கள் சிறப்பாக வாழும்படி விரும்புகிறேன் என்று சொல்கிறார். நல்ல முதலீட்டாளர்கள் உங்களை இரண்டு காரியங்களை செய்ய சொல்வார்கள். முதலாவதாக, பாதுகாப்பான முதலீடான்னு பாரு, மேலும் இரண்டாவதாக, பெருக்கமடையுமான்னு பார். நியாயத்தீர்ப்பு நாளில் நமக்கு பலன் சேர்க்கிற மாதிரி தேவனுடைய ஊழியங்களுக்காக உதாரத்துவமாக கொடுப்பதை  காட்டிலும் மேலான ஒரு காரியம் ஒன்றுமே இல்லை.

ஒரு மனுஷனை குறித்த பழைய கதை ஒன்று தெரியுமா - ஜான், அதை நிச்சயமாக கேட்டிருப்பீங்க ஏன் பலமுறை பயன்படுத்தியும் இருப்பீங்க - அதாவது அவன் பரலோகத்திற்கு போகிறான் அந்த அவனுடைய இடத்தை பார்க்கும்போது அவனுக்கு அதிக சந்தோஷம் உண்டாகல. அதாவது, இங்க, பேதுரு சொல்லும்போது சொல்கிறார், “ஆமா,  நீ இங்க அனுப்பனத்தை வைத்து எங்களால் இதைதான் உண்டாக்க முடிந்தது என்று சொனார்.” இது கிண்டலாக இருக்கலாம் ஆனா இதுல ஒரு சத்தியம் அடங்கியிருக்குது.

3). மூன்றாவது, இயேசு கிறிஸ்து நல்ல உபசரிப்பை கவனிக்க போகிறார். இந்த அருமையான வார்த்தைகளை கவனிங்க: “அன்றியும் நீ பகல் விருந்தாவது இராவிருந்தாவது பண்ணும்போது உன் சிநேகிதரையாகிலும் உன் சகோதரரையாகிலும் உன் பந்துஜனங்களையாகிலும் ஐசுவரியமுள அயலகத்தாரையாகிலும் அழைக்க வேண்டாம். அழைத்தால் அவர்களும் உன்னை அழைப்பார்கள். அப்பொழுது உனக்குப் பதிலுக்கு பதில் செய்ததாகும். நீ விருந்து பண்ணும்போது ஏழைகளையும் ஊனரையும், சப்பாணிகளையும் குருடரையும் அழைப்பாயாக. அப்பொழுது நீ பாக்கியவானாயிருப்பாய்; அவர்கள் உனக்கு பதில் செய்ய மாட்டார்கள். உயிர்த்தெழுதலில் உனக்கு பதில் செய்யப்படும் என்றார்.” (லூக்கா 14) என்னவொரு அருமையான வார்த்தை. இயேசு சொல்லுகிறார் நாம விருந்துக்கு அழைக்கிறவர்கள் மறுபடியும் நம்மையும் அழைத்து பதில் செய்யாதவர்களை பார்த்து அலைக்கவேண்டுமாம் எந்தவித எதிர்ப்பார்ப்பும் இல்லாம உதாரத்துவமாக செய்யணும் - தேவன் இந்த காரியங்களை குறித்து வைத்து கொள்வார் அவை அவருக்கு ரொம்ப முக்கியமான ஒன்றாக கருத்தப்படுகிரதாம். நியாயத்தீர்ப்பின் நாளில் இந்த மாதிரியான காரியங்களைத்தான் இயேசு கிறிஸ்து பார்க்கும்படியாக விரும்புகிறார்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், நாம கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு இயேசுவுக்கு முன் நிற்கும்போது நம்முடைய வாழ்வில் என்ன

இருந்திருக்கவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார் என்பதை பார்த்துவருகிறோம். இந்த காரியங்களுக்கு அவர் பலன் கொடுப்பவராக இருக்கிறார். ஒன்னு கேட்கணும் Dr. லட்சர் நம்முடைய இருதய தன்மையின் முக்கியத்துவத்தை பற்றி விளக்கமா சொல்லுங்க. அவர் சொல்வதை கவனியுங்கள்.

**எர்வின் லட்சர்:** சரி, அதாவது, முக்கியமான காரியங்களை மேம்படுத்தி சொல்லிவருகிறோம், அதுல மனதின் தன்மையும் ரொம்ப முக்கியமான ஒன்று. உங்களுக்கு இயேசு தன்னிடத்தில் இருந்த இரண்டு காசை காணிக்கை போட்ட பெண்ணை இயேசு பார்த்துகொண்டிருந்தது ஞாபகம் இருக்கா. விதவையின் காசு என்று நாம் கேட்டிருக்கிறேன் ஆனா இங்க அவள் இரண்டு காசு கொடுத்தாள் என்று இருக்கிறது, அருமையான இருதயம். இயேசு இதை சொல்லும்போது, தனக்குரிய எல்லாத்தையும் கொடுத்தாள் என்கிறார் ஏன்னா மனப்பூர்வமாக முழுமனதோடு கொடுத்தால் தன்னுடைய ஜீவனத்திலிருந்து எடுத்து கொடுக்கிறாள். இதுல எவ்வளவு பணம் என்பதல்ல, மனநிலையே முக்கியமானது. இந்த உதாரத்துவமுள்ள இருதயத்தில் தான் தேவன் ஆர்வமுடையவராக இருக்கிறார். மேலும் நீதிமான்களின் உயிர்த்தெழுதலில் இதற்கேற்ற பலனை நாம் பெற்றிடுவோம் என்றும் சொல்லியிருக்கிறார்.

இன்னும் இயேசு நம்மிடம் எதிர்பார்க்கும் வேறு சில காரியங்களை குறித்து தொடர்ந்து பார்க்கலாம்.

4). நான்காவது. ஆவிக்குரிய ஒழுக்கம். சரி, இவை மத்தேயும் ஆறாம் அதிகாரத்தில் சொல்லப்பட்டு இருக்கிறது. அவர் சொல்கிறார், “நீயோ ஜெபிக்கும்போது, உன் அறைவீட்டிற்குள் இருந்து ஜெபி.” அதை வெளிப்படையாக எல்லார் முன்னால பண்ணாதே. தேவனுக்கு ஏறெடுத்திடு. “அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா உனக்கு வெளியரங்கமாக பதிலளிப்பார் என்றார்.” இது கொஞ்சம் நேரத்துக்கு முன்னால நாம பேசின கொடுக்கும் விஷயத்திற்கும் பொருந்தும். நீ உதாரத்துவமா கொடுக்கிற என்பதை மக்கள் அங்கீகரிக்கும்படி கொடுக்காதே. ரகசியமாகொடு உதாரத்துவமா கோடு ஏன்னா தேவன் அதை பார்த்துகொண்டு இருக்கிறார். இது உபவாசத்திற்கும் பொருந்தும். தேவனுக்காக மட்டும் என்ற வகையை சேர்ந்து சில காரியங்ககளை நாம வாழ்க்கையில் செய்ய கற்றுக்கொள்ளவேண்டும். அந்த மாதிரியான காரியங்கள் தான் இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்தின் போது கிறிஸ்துவை ஈர்க்க கூடியவைகளாக இருக்கிறது.

இந்த பட்டியலில் அடுத்ததாக இருப்பது.

5). நம்முடைய வேலையில் உண்மையாக இருத்தல். கொலோசெயர் மூன்றாம் அதிகாரத்தில், இந்த வார்த்தைகளை பார்க்கிறோம். சரி, பவுல் அடிமைகளிடம் பேசிக்கொண்டு இருக்கிறார், நினைவிருக்கட்டும், அடிமைகளுக்கு ரொம்ப கடினமான நேரம் தான் இருக்கும். ஆனா கவனமாக கேளுங்கள் இன்றைக்கும் நமக்கு இது எப்படி பொருந்துமென்று பார்க்கலாம். “வேலைக்காரரே, சரீரத்தின்படி

உங்களுக்கு எஜமன்களாய் இருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்படிந்து, நீங்கள் மனுஷருக்கு பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல் தேவனுக்கு பயபடுகிறவர்களாக கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள். நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவை சேவிக்கிறதினாலே சுதந்தரமாகிய பலனை கர்த்தராலே பெறுவீர்கள் என்று அறிந்து எதை செய்தாலும் மனுஷருகென்று செய்யாமல் தேவனுகென்றே மனப்பூர்வமாய் செய்யுங்கள்." இந்த உலகத்துல நல்ல பலன் இல்லாமல் இருக்கலாம், நீங்க செய்கிறதில் உண்மையாகவும் அதை கிறிஸ்துவுக்காகவும் செய்வீர்களானால் அவருக்கு கணக்குகொடுக்கனுன்னு நினச்சு செய்தா, உங்களுக்கு பலன் கிடைக்கும், வேதம் சொல்கிறது, "சுதந்தரமாகிய பலனை கர்த்தராலே பெறுவீர்கள்."

நண்பர்களே, இன்றைக்கு, இந்த எல்லா விஷயங்களிலும் இயேசு ஆர்வமுள்ளவராக இருக்கிறார் என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். நிறைய விஷயங்களை நாம செய்திருக்கலாம் அதை மறந்தும் இருக்கலாம் எத்தனை பேரை ஆசீர்வதித்திருக்கிறோம் உற்சாகப்படுத்தி இருக்கிறோம், என்பது நமக்கு ஞாபகம் இல்லை, ஆனா அவர் எல்லாத்தையும் பதிவு செய்திருக்கிறார் அதனாலதான் அவர் சொல்கிறார் ஒருவனுக்கு ஒரு கலசம் தண்ணீர் கொடுத்தா கூட அது கணக்குல வைக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்கிறார்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஒருவேளை பில்லி கிரஹாம் அல்லது ஒரு சிறந்த அருட்பணியாளர் கிறிஸ்துவின் நியாயாசனத்தின் போது சிறப்பாக காணப்பட முடியுமா? தெரியல. எதிர்காலத்தில் எல்லா கிறிஸ்தவர்கள் இயேசுவிடம் இருந்து பலனை பேற்றுவதற்கு செய்ய வேண்டிய முக்கியமான காரியங்கள் என்ன? கவனிங்க:

**எர்வின் லட்சர்:** ஒருவேளை இன்றைக்கும் உங்களுக்கு வீட்டின் முன்னறையில் உட்கார்ந்து உங்களோடு நேரடியாக பேசும் நேரம் கிடைத்தால், உண்மையாகவே நீங்க என்ன செய்றீங்க என்பதை கேட்டு தெரிந்து கொள்வேன், ஏன்னா நியாயத்தீர்ப்பின் நாளில் நீங்க எப்படி நிர்ப்பீங்க என்பதில் ஆர்வமுடையவனாக இருக்கிறேன். அக்கறை இருக்கு, முதலாவதாக, என்னை பற்றிய அக்கறை, அப்பறம் உங்களையும் யோசித்து பார்க்கிறேன். உண்மைதான். இந்த பட்டியலை தொடர்ந்து பார்க்கலாம், கவனிங்க; சோர்ந்து போயிடாதீங்க. ஏன்னா ஞாபகமிருக்கட்டும், இயேசு கிறிஸ்து உங்க பக்கத்துல தான் இருக்கிறார் நமக்கு உதவும்படியாகதான் இங்கு இருக்கிறார்.

6). ஆறாவதாக நேசிக்க முடியாதவர்களை நேசித்தல். அதாவது, சில நேரம் மக்கள் சொல்வதை கேட்டிருக்கிறேன். “நா, தேவனுக்கு பிரியமாக இருக்கனும்.” ஜான், அப்படி பேசுகிறவர்களை கேட்டிருக்கிறீங்களா. நா தேவனுக்கு ஏற்றமாதிரி இருக்கனுன்னு

சொல்வாங்க அப்படியே நடந்துக்கவும் முயற்சிப்பாங்க. சரி, தேவனை போல இருப்பதற்கான வழிகளில் ஒன்று நம்முடைய சத்துருக்களை சிநேகிக்க வேண்டும். இயேசு சொல்கிறார், "உங்கள் சத்துருக்களை நீங்கள் சிநேகித்தால் - இது லூக்காவின் ஆறாம் அதிகாரம் - "அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும்; உன்னதமானவருக்கு நீங்கள் பிள்ளைகளாய் இருப்பீர்கள் அவர் நன்றியறியாதவர்களுக்கும் துரோகிகளுக்கும் நன்மை செய்கிறாரே." இவனை நேசிப்பது என்பது கடினமாக ஒன்று என்பவர்களை, நேசிக்கும்படியாக உங்களுக்கு சவாலிடுகிறோம் இப்படி செய்வதால் தேவனை போல இருப்பீர்கள். தேவனும் நேசத்திற்கு பாத்திரமற்றவர்களை நேசிக்கிறார் நாமளும் செய்யணும், நம்முடைய பலன் மிகுதியாக இருக்கும். அடுத்து ஏழாவது என்னனு பார்க்கலாம்.

7). உபதேசத்தில் உத்தமம். உத்தம உபதேசம். 2 யோவான் ஒன்றாம அதிகாரத்தில் நாம வாசிக்கும்போது அங்கு, "உங்கள் செய்கைகளின் பலனை இழந்து போகாமல் பூரண பலனை பெறும்படிக்கு கிறிஸ்துவின் உபதேசத்திலே நிலைத்திருக்க எச்சரிக்கையாயிருங்கள்." அதாவது, "பூரண பலனை அடையும்படிக்கு." கவனிங்க, இது இன்னொன்றை நினைப்பூட்டுது, ஜான், அப்படின்னா பாதி பலனை சிலர் பெருவதற்கு இங்கு வாய்ப்புகள் இருக்கிறது., பரலோகத்தில் எல்லாரும் ஒரே மாதிரிதான் நடத்தப்படுவோம் என்பது சரியா. எல்லாருக்கும் ஒரே விதமான பலன்கள் கொடுக்கப்படும்

என்பது வேதத்தின் கருத்து அல்ல. பலன்கள் என்ற காரியத்தின் மெய்பொருள் அதன் சாராம்சம் வேத வசனங்களில் இருக்கிறது. சரி இப்ப அடுத்ததை பார்க்கலாம்.

8). எட்டாவது. ஜனங்களுக்குள் முதலீடு செய்தல். பவுல் சொல்கிறார் 1 தேசலோனிகேயர் 2:19ல, அவர் சொல்கிறார், “எங்களுக்கு நம்பிக்கையும் சந்தோஷமும் மகிழ்ச்சியின் கிரீடமுமாயிருப்பவர் யார்? இயேசு கிறிஸ்து வரும்போது நீங்களல்லவா அப்படி இருப்பீர்கள்?”நாம் கர்த்தராகிய இயேசுவுக்கு முன்பாக நிற்க போகிறோம் என்று உண்மையை நீங்கள் புரிந்துகொள்ளும்படி விரும்புகிறேன், ஜான், நாம தாக்கத்தை உண்டாக்கிய மக்கள், நம்முடைய நியாயத்தீர்ப்பின் போது நம்மை பற்றி பதிப்பிட மிக முக்கியமாக கருதப்படுவது இதுவாகத்தான் இருக்கும். உங்களுக்கு தெரியுமா, நிறைய பேர் இருக்காங்க, நீங்க அவங்க வாழ்கையில் மாற்றத்தை உண்டாக்கி கிறிஸ்தவ விசுவாசத்திற்குள் அவர்களை நடத்திட முடியும், மற்றவர்களுக்கு நீங்கள் சாட்சியாக இருக்க முடியும். இதல்லாம் இயேசு கிறிஸ்து நம்மிடத்தில் பார்க்க நினைக்கிற காரியங்களில் சில.

9). ஒன்பதாவது. கிறிஸ்துவின் வருகையை பார்த்துகொண்டு இருக்கணும். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்கிறார் அவர் நீதியின் கிரீடத்தை பெற்று கொள்ள போகிறாராம். அதாவது நாம, அடுத்த நிகழ்சிகளில் இந்த கிரீடங்களை குறித்து பார்க்க போகிறோம். ஆனா பவுல் சொல்கிறார், “ அவருடைய வருகையில் பிரியமாக இருக்கிற

அனைவருக்கும் வைகப்படிருக்கிற நீதியின் கிரீடத்தை பெற்றுக்கொள்ள ஆவலாக இருக்கிறேன் என்று பவுல் கூறுகிறார்." மேலும் இயேசுவும் லூக்கா 12 அதிகாரத்தின் உவமையை சொல்லும்போது சொல்கிறார், உண்மையுள்ள ஊழியர்களை பார்த்து அவர் சொல்லும்போது, எஜமானின் வருகைக்காக ஆவலாக காத்திருக்கிறவர்கள் என்று குறிப்பிட்டு சொல்கிறார். அதாவது, கிறிஸ்து என்றைக்கு வேண்டுமானாலும் வந்திடுவார் அவர் வந்து நம்மை தம்மோடு சேர்த்து கொள்வார். இது கேள்வி என்னன்னா, " அவரை நாம அதிகமாக நேசிக்கிறோமா அவரை பார்க்க விரும்புகிறோமா அவரை பார்த்து சொல்ல முடியுமா, "கர்த்தராகிய, இயேசுவே, சீக்கிரம் வாரும்" அல்லது அவரை பார்த்து, ஆண்டவராகிய இயேசுவே, இப்ப திரும்ப வராதீங்க. இதை செய்து முடிக்கிற வரைக்கும் கொஞ்சம் இருங்க, இது முடியட்டும், அப்பறம் வாங்க என்கிறோமா."

ஜான், இன்றைக்கும் நீங்களும் நானும் இதை கேட்டுகொண்டிருக்கிற பார்த்துகொண்டிருக்கிற நேயர்களும் கூட இயேசுவை அதிகமாக நேசிக்கிறோம் அவரை முகமுகமாக பார்க்க ஆவலாக இருக்கிறோம் என்று நினைக்கிறேன். அவரை நாம அதிகமாக நேசித்தால், அதாவது, அவரை சிறப்பாக பிரதிபலித்திட முடியும். இயேசுவின் படம் என்று அருமையாக வரைந்தத கஸ்டேவ் டோரை எனக்கு ரொம்ப பிடிக்கும் ஒருவர் இப்படி சொன்னாங்க, "இந்த மாதிரி வரைவதற்கு நீங்க அவரை அதிகமாக நேசித்திருக்கணும்." அதற்கு கஸ்டேவ் டோர் சொன்னாரும்,

“ஆமா அவரை நேசிக்கிறேன். ஆனா இன்னும் அதிகமா நேசித்தா, இன்னும் சிறப்பாக வரைந்திருக்க முடியும்.”அவரை சிறப்பாக வரைகிற அளவிற்க்கு அவரை அதிகமாக நேசிக்க வேண்டும் என்பது எனது விருப்பம் என்றார்.

சரி, அடுத்தது பத்தாவது எண்ணிற்கு வந்துட்டோம், இது என்னன்னா:

10). பாடுகள். 1 பேதுரு 1: 7ல் சொல்லப்பட்டு இருக்கிறது, “உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்கு புகழ்ச்சியும் கனமும் மகிமையும் உண்டாகக் காணப்படும்.” நான் என்ன நினைக்க விரும்புகிறேன் என்று தெயர்யுமா? நாம பலனை பெரும்படியாக தான் தேவன் நமது பாதையில் பாடுகளையும் வேதனைகளையும் வைக்கிறார். அவருக்கு முன்பாக வைக்க நமக்கு ஏதாவது ஒன்று இருக்கவேண்டும். அது மட்டுமல்ல, அவரை நாம நேசிக்கும் நேசமும் அவருக்கு முன்பாக நிச்சயம் வைக்கப்படும். இன்றைக்கு நீங்கள் ஒன்றை புரிந்துகொள்ள விரும்புகிறேன், இயேசு கிறிஸ்து நமக்கு கொடுக்க நினைக்கும் பலன்கள் மற்றும் அவர் எதிர்பார்த்துகொண்டிருக்கும் கிரியைகள், என்று இந்த எல்லா காரியங்களுமே சிறப்பாக இருக்க ஒரே வழி அவரை முற்றிலும் சார்ந்துகொண்டவர்களாக இருப்பதுதான் என்பது என் கருத்து. அதாவது, இதை எளிமையாக சொன்னால் நம்மூலம் கிறிஸ்து வெளிபடுவது போல நடந்துகொள்வதும் நம்மிடம் எந்த நன்மையையும் இல்லை எல்லாமே இஎசுவாலதான் நடக்கிறது என்ற உண்மையை அறிந்து

நடப்பது கிறிஸ்துவின் கவனத்தை ஈர்ப்பதா இருக்கும் என்று சொல்கிறேன். இதற்கு ஒரே வழி அவருடைய விருப்பபடி அவர் நமக்குள் இருந்து வாழ்ந்திட இடமளிக்க வேண்டும் அவர் நமக்குள் தம்மை வெளிபடுத்த இடமளிக்கவேண்டும், அப்படி செய்வதினால் நாம நம்முடைய பலனை பெறுகிறவர்களாக இருந்திடுவோம்.

ஜான், ஞாபகமிருக்கா, ஒரு பழைய கதை மைகேல் ஆங்கிலோ ஒரு நாள் நடந்து போகும்போது அங்க ஒரு மார்பிள பார்த்தார் உடனே அவர், “ இந்த மார்பல் ல ஒரு தூதனை பார்க்கிறேன் என்றார்”. அப்ப, அதாவது, மைகேல் ஆங்கிலோ என்ன செய்தாருன்னா அந்த மார்பல் கல்லில் இருந்து ஒரு தூதனை வடிவமைக்கும் வரிக்கும் அதை செதுக்கினார், என்பார்கள். அதாவது, ஒருவர் ஒரு சிற்பியிடம் கேட்டார், “உங்களுக்கு, தூதனை உண்டாக்குவது எப்படின்னு தெரியுமா? அதற்கு அவர், அதுல எந்த பிரச்சனையும் இல்ல. ஒரு மார்பில் கல்லை எடுத்து அதில் தூதனை போல இல்லாத இடங்களை நேர்த்தியாக செதுக்கிடுங்கள் என்றார்.” சரி, இதைத்தான் தேவனும் நமது வாழ்க்கையில் செய்துகொண்டு இருக்கிறார். இயேசுவை போல தோன்றாத எல்லா காரியங்களையும் அவர் நம்முடைய வாழ்விலிருந்து அகற்றிவிடுகிறார் அவரை நேசித்து அவருக்காக வாழவேண்டும் என்று நிலைக்கு கொண்டு வருகிறார், அவருடைய சத்தத்தை கேட்கும் நிலைக்கு நம்மை நிறுத்துகிறார், “நல்லது, உண்மையும் உத்தமும் உள்ள ஊழியக்காரனே.”

**ஆன்கர்பெர்க்:** சரி, இன்றைய நிகழ்ச்சியை நீங்கள் பார்த்துகொண்டு இருப்பீர்கள் என்றால், உங்களுடைய நற்கிரியைகளினால் தான் நீங்கள் தேவனுடைய மன்னிப்பையும் தயவையும் பரலோகத்தையும் பெற்றுக்கொள்ள போகிறீர்கள் என்ற எண்ணத்தை கொண்டிருக்க வேண்டாம் என்கிறேன். ஒருவனும் இரட்சிப்பை சம்பாதிக்க முடியாது. ஆனால் நாம எப்படி பரலோகம் போக முடியும் எதன் அடிப்படையில் கிறிஸ்து நமக்கு பலன் அளிக்க போகிறார்? கவனிங்க:

**எர்வின் லட்சர்:** சரி, உங்களோடு மிக முக்கியமான ஒரு காரியத்தை பகிர்ந்துகொள்ள விரும்புகிறன். நாம முக்கியமான பல காரியங்களை குறித்து பார்த்துகொண்டு வருகிறோம், குறிப்பாக, இப்ப கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நியாயந்தீர்க்கப்படுவதை பற்றி பார்க்கிறோம். உங்களிடம் பிரதானமாய் ஒரு கேள்வியை கேட்க விரும்புகிறேன். பரலோகம் போறதுக்கு நீங்க எந்த அளவிற்கு பூரணமாக இருக்கனுன்னு யோசித்து இருக்கீங்களா? இந்த கேள்வியை பலரிடம் கேட்டிருக்கிறேன் அவர்களில் பெரும்பாலானவர்கள், " அதுக்கு, பரிபூரணம் இருக்கனுன்னு சொன்னா நிச்சயம் என்னால அது முடியாது என்கிறார்கள்." ஒன்னு சொல்லட்டுமா நீங்க தேவனை போல பரிபூரணமாக மாறாவிட்டால், நீங்கள் கைவிடப்பட வாய்ப்பு இருக்கிறது."

ஆனா உங்களுக்கு ஒரு நல்ல செய்தி இருக்கு. நம்மை நாம நம்புவதை விட்டுவிட்டு நம்முடைய விசுவாசத்தை நம்பிக்கையை இயேசு

கிறிஸ்துவின் மீது வைக்கும்போது, அவருடைய நீதியை நாம பெற்றுகொள்கிறோம் தேவனுடைய பார்வையில் அவர் பூரணராக இருப்பது போல நாமும் பூரணராக காணப்படுவோம். “நாம் அவருக்குள் தேவனுடைய நீதியை பெற்றுகொள்ளும்படிக்கு பாவம் அறியாத அவர் நமக்காக பாவமானார்.” இது நற்செய்திதானே? இன்றைக்கு நிச்சயம் தேவன் உங்களோடு இடைபட்டு கொண்டு இருக்கிறார் உங்களில் சிலர் சொல்லாம், “ ஆண்டவராகிய இயேசுவே, நான் ஒரு பாவி. உம்முடைய இலவசமான ஈவை பெற்றுகொள்கிறேன்.” சரி, நீங்க அப்படி சொல்றீங்கன்னா, நீங்க கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வந்து நிற்கும்போது இந்த வார்த்தைகளை சொன்ன நேரத்திலிருந்து நடக்கிற காரியாய்ந்களை குறித்து கணக்கு கொடுக்கிறவர்களாக இருப்பெர்கள். உங்களில் சிலர், இந்த நிமிடத்தில் இருந்து கணக்கு கொடுக்கணும் ஏன்னா இப்ப நீங்க தேவனுடைய குமாரனாக குமாரத்தியாக மாறியிருக்கிறீர்கள், ஒரு தகப்பனாக, அவர் உங்களை மதிப்பிட போகிறார். அதை பற்றிதான் நாம் இங்கு பேசிக்கொண்டு இருக்கிறோம். இன்னொன்றையும் நீங்க தெரிஞ்சுக்க விரும்புகிறேன் அவருக்காக செய்கிற எல்லாம் பதிவு செய்யப்பட்டு இருக்க்ரியது அது அவருக்கு விலையேறபெற்றதும் முக்கியமானதுமாக இருக்கிறது.

இயேசு கிறிஸ்து எதையெல்லாம் கவனிப்பார் என்று பத்து காரியங்களை உங்களுக்கு சொல்லியிருக்கிறேன். இதுவரை பார்த்த

பட்டியலை கவனிக்கும்போது நம்மிடம் எல்லா தகுதியும் இருக்குன்னு சொல்ல முடியாது. தங்கள் வாழ்வில் சீரற்ற நிலையில் இருக்கும் கிறிஸ்தவர்கள் இதை கேட்டுக்கொண்டு இருக்கலாம். எங்கிருந்து துவங்கினீங்க? இன்றைக்கு மறுபடியும் உங்களை விட்டு கொடுத்து விசுவாசத்தில் துவங்குங்கள், நினைவிருக்கட்டும் இன்றையிலிருந்து நீங்க செய்கிற ஒவ்வொரு காரியத்துக்கும், கணக்கு கொடுக்கணும் அவை இயேசு கிறிஸ்துவின் மூலம் பிதாவிற்கு பிரியமானதாக ஏற்று கொள்ள கூடியதாக இருக்கணும் அதை தாழ்மையோடும் அவரை சார்ந்துகொள்ளும் மனதோடும் செய்திடுங்கள்.

தாவது, ஜான், ஒரு ராஜாவை குறித்த கதை எனக்கு நினைவிற்கு வருகிறது, இந்த ஐசுவரியமான மனிதன் இந்தியாவில் இருந்தார், அப்படிதான்னு நினைக்கிறேன், அது ஒரு அருமையான மேதையின், வாழ்க்கை யன்று சொல்வேன். அவர் அழகான ரதத்தில் போயிட்டு இருக்கும்போது சாலையின் ஒரு புறத்தில் ஒரு பிச்சைகாரன் கிண்ணத்தில் சாப்பாடு வைத்துகொண்டு ஏதாவது கிடைக்குமா என்று பார்த்து கொண்டு இருந்தானாம். இந்த ராஜா ரதத்தில் இருந்து இறங்கி அந்த பிச்சை காரனிடம் போய், “பிச்சைக்காரனே, எனக்கு உன்னுடைய சாதத்தில் கொஞ்சம் தரையான்னு கேட்டாராம்.”

பிச்சைகாரனுக்கு ரொம்ப கோபம் வந்தது. “எங்கிட்ட எப்படி நீ இதை கேட்கலாம்? கோபத்தோடும் வெறியோடும் அந்த பிச்சைகாரன் ஐசுவரியமான மண்டிஹறனும் ஒரு பருக்கை சோற்றை கொடுத்தான்.

மேலும் ராஜா, “உன்னுடைய சாதத்தில் இருந்து கொஞ்சம் கொடு என்றான்! அந்த பிச்சைகாரன் இன்னொரு பருக்கை சோற்றை கொடுத்தான், அப்பறம் மூன்றாவது பருக்கை. அப்பறம் இல்ல. அந்த ராஜா தனது அழகான ரதத்தில் ஏறி அங்கிருந்து போயிட்டார். அந்த பிச்சைகாரனுக்கு ஒன்னும் புரியல! கோபத்துல, தன்னுடைய கிண்ணத்தில் மீதியாக இருந்த பருக்கை சோற்றை பார்த்தான் அப்போது அது மினுமினுப்பாக தெரிந்தது. அதிக கவனமாக பார்த்தான். அங்க சோற்று பார்க்கை அளவிலான தங்க துண்டுகள் இருந்தது. இப்ப அதுல ஜாக்கிரதையாக தேடி பார்த்தான் இன்னும் இரண்டு துண்டுகளை கண்டுபிடித்தான். ஒவ்வொரு பருக்கைக்கும் அங்க ஒரு தங்கம் இருந்தது.

அதாவது, இப்படிதான் இயேசு கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நாமும் கண்டுபிடிக்க போகிறோம். அவருடைய தங்கம் நம்முடைய அரிசி. நம்முடைய வாழ்க்கையும் சாட்சியும் அவருடைய நாமம் மகிமைக்காக செய்த அனைத்தும் நித்திய நித்தியமாக அவருக்கு உரியதாக இருக்க போகிறது. அந்த பிச்சைகாரன் நினைத்ததை போல நாம சொல்ல லாமா: ஓ!ஓ! என்னுடைய எல்லா சாதத்தையும் கொடுத்திருக்கலாமே! சரி, இன்றைக்கு நம்முடைய எல்லாவற்றையும் கிறிஸ்துவிடம் கொடுக்கும்படியான சந்தர்ப்பத்தை நாம் பெற்றிருக்கிறோம் அதினால் நமது பலனை பெற்றிடுவோம்.

அதுமட்டுமல்ல, ஜான், அந்த பொன் தான் அக்கினியை கடந்து வருவதாக இருக்கிறது அதை பற்றி அடுத்த நிகழ்ச்சியில் பார்க்கலாம்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.